**செ.வெ.எண்:** **நாள்:28.06.2021**

## நாமக்கல் மாவட்டம்

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்படும் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங்.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 2 பேரூராட்சிகள் மற்றும் 318 குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங்.இ,ஆ.ப., அவர்கள் இன்று (28.06.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நாமக்கல் மாவட்டத்தின் சேந்தமங்கலம் பேரூராட்சி மற்றும் காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சி உள்பட 318 கிராம குடியிருப்பு மக்களின் குடிநீர் தேவைக்காக 1,94,905 பொதுமக்கள் பயன்பெறும் வகையிலான 2 பேரூராட்சிகள் மற்றும் 318 கிராம குடியிருப்புக்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்பட்டு வருகின்றது.

இத்திட்டமானது காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு 1 நீர் சேகரிப்பு கிணறு, 6 நீர் உறுஞ்சு கிணறுகள் அமைக்கப்பட்டு, அதனடிப்படையில் தற்போது 10.41 எம்எல்டி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இதன்மூலம் சேந்தமங்கலம் பேரூராட்சிக்குட்பட்ட 21,776 பொதுமக்களுக்கு 70 லிட்டர் வீதமும், காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட 10,831 பொதுமக்களுக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் எருமபட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 90 ஊரகக் குடியிருப்புகளைச் சேர்ந்த 66,700 பொதுமக்கள், மோகனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 63 ஊரகக் குடியிருப்புகளைச் சேர்ந்த 27,775 பொதுமக்கள், நாமக்கல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 51 ஊரகக் குடியிருப்புகளைச் சேர்ந்த 20,750 பொதுமக்கள், சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 99 ஊரகக் குடியிருப்புகளைச் சேர்ந்த 47,075 பொதுமக்களுக்கு தலா 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முதலாவதாக மோகனூர் ஊராட்சி ஒன்றியம் ஒருவந்தூர் பகுதியில் காவிரி ஆற்றில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் திட்டம் 1-ன் கூட்டுக்குடிநீர் திட்ட தலைமை நீரேற்று நிலையத்தினை பார்வையிட்டு, நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார்களின் இயக்கம் குறித்தும், நீரேற்றும் குழாயில் உள்ள அளவீட்டுக்கருவியில் காட்டும்

நீரின் அளவு ஆகியவை குடிநீர் திட்ட வழிகாட்டி கணக்கீட்டின்படி உள்ளனவா என்று குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்களுடன் கணக்கிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் திட்டத்திற்குட்பட்ட மோகனூர் ஊராட்சி ஒன்றியம், என்.புதுப்பட்டி ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டிக்கு வரும் நீரின் அளவு குறித்தும், அதிலிருந்து ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் உள்ள வீடுகளுக்கு வழங்கப்படும் குடிநீர் குறித்தும், குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் உள்ளாட்சித்துறை அலுவலர்கள் மற்றும் ஊராட்சித்தலைவர் ஆகியோருடன் கலந்தாலோசனை மேற்கொண்டார். என்.புதுப்பட்டி ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களுக்கு காவிரி குடிநீர் தனியாகவும், ஊராட்சிக்குட்பட்ட நீர்கிணறுகளில் இருந்து பெறப்படும் நீர் ஆதாரத்தின் மூலம் குடிநீர் அல்லாத பிற உபயோகங்களுக்கான நீர் தனியாகவும், முறைவைத்து வழங்கப்படுவதை இந்த ஆலோசனையின்போது உறுதி செய்து பிற ஊராட்சிகளிலும் காவிரி கூட்டுக்குடிநீர் திட்ட நீரை தனியாகவும், பிற உபயோகங்களுக்கான நீரை தனியாகவும் பொதுமக்களுக்கு வழங்க உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள உள்ளாட்சித்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், சிவியாம்பாளையம் ஊராட்சி, கட்டபொம்மன் நகரில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 4.5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து, குடியிருப்பு பகுதிகளுக்கு நீரேற்றம் செய்யப்படும் குடிநீரின் அளவு குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கடைக்கோடி பகுதியான காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சியில் கட்டப்பட்டுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டிக்கு வரும் நீரின் அளவை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங்.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது பொதுமக்களிடம் குடிநீர் வழங்கப்படும் நாட்களின் சுழற்சி குறித்தும், தெரு விளக்குகள் சரியாக இயங்குகின்றதா என்றும் கேட்டறிந்தார். தெருவிளக்குகள் பழுதுபட்டால் உடனடியாக சீர் செய்ய வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வுகளின்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கோ.மலர்விழி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயற்பொறியாளர் திரு.ராஜமாணிக்கம், உதவி செயற்பொறியாளர்கள் திரு.வரதராஜன், திருமதி.அகிலாபானு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சி.சீனிவாசன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)(பொ) திரு.கிருஷ்ணமூர்த்தி உட்பட மோகனூர், நாமக்கல், சேந்தமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.**